
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 26 வெள்ளிக்கிழமை 09.05.2025 கதிர் 191









## ஹெலிகொப்டர் விபத்தில் 6 படையினர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 09

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஒன்று மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 படையினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஹிங்குராக்கொட விமானப்படை தளத்திலிருந்து புறப்பட்ட ஹெலிகொப்டர், மாதுரு ஓயா இராணுவ விசேட படைத்தளத்தில் இருந்து விசேட படைப்பிரிவின் பயிற்சி நிறைவு அணிவகுப்பில் ஒரு விளக்கப் பயிற்சியைக் காண்பிக்க விசேட படையினருடன் பயணித்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தின்போது ஹெலிகொப்டரில் இருந்த 2 விமானிகள் உட்பட 12 பேர் மீட கப்பட்டு வைத்தியசாலையில் அரலகங்வில அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக

7➤

### மீண்டும் கூட்டமைப்பாகச் சேர்ந்து ஆட்சியமைக்க

# காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுக்கு தமிழரசு அழைப்பு!



யாழ்ப்பாணம், மே 09

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.


யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றி ஆளும் வகையில் முதல் நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கின்றது.

7➤

## அவசரமாக ஒன்றுகூடும் மொட்டுவின் பிரபலங்கள்



கொழும்பு, மே 09

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் கட்சிக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகின்றது.

7➤

### யாழ். ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த

## பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீரில் மூழ்கிப் பரிதாப உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று

7➤

## இவ்வருடம் இதுவரை 43 துப்பாக்கிச் சூடுகள்!



- 29 பேர் உயிரிழப்பு
- 23 பேர் காயம்
- 94 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 09

2025 ஆம் ஆண்டின் ஜனவரி

7➤

## நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவுப் பிரார்த்தனை இன்று





கொழும்பு, மே 09

நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவுப் பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

7➤

## இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த பங்களாதேஷ் பிரஜைகள் 34 பேர் சிக்கினார்கள்

கொழும்பு, மே 09

விசா காலாவதியாகி இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் நேற்று வியாழக்கிழமை சீதுவை பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த பல புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அரச ஊழியர்களின் சம்பளத்திற்கு இணையான தனியாரின் சம்பள அதிகரிப்பு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை

கொழும்பு, மே .09

அரச ஊழியர்களின் சமீபத்திய சம்பள திருத்தத்திற்கு இணையாக தனியார் துறை ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச மாதாந்திர மற்றும் தினசரி சம்பளம் அதிகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் மற்றொரு நடவடிக்கையை எடுத்துள்ளது.



அதன்படி, தனியார்துறை ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச மாதாந்திர மற்றும் தினசரி சம்பளத்தை அதிகரிப்பதற்காக, 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க தொழிலாளர் வரவு செலவு திட்ட நிவாரண கொடுப்பனவு சட்டம், 2016ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தொழிலாளர் வரவு செலவு திட்ட நிவாரண கொடுப்பனவு சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தொழிலாளர் தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டம் ஆகியவற்றின் திருத்தங்களை வர்த்தமானியில் வெளியிடும் முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இந்த திருத்தங்களுக்கு ஏப்ரல் 7ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

குறித்த அனுமதியின் படி, மேற்படி சட்டங்களைத் திருத்துவதற்கான திருத்த மசோதாக்களை சட்ட வரைவாளர் தயாரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சட்டமா அதிபரின் அனுமதிகளும் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி, இந்த திருத்த மசோதாக்களை வர்த்தமானியில் வெளியிட்டு பின் அவற்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய தொழிலாளர் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# 13 ஆம் திகதி வரை விசேட புகையிரத சேவை

கொழும்பு, மே .09

நீண்ட விடுமுறை மற்றும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விசேட புகையிரத சேவை முன்னெடுக்கப்படும் என புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கோட்டையில் இருந்து பதுளை வரையிலும், பதுளையில் இருந்து கொழும்பு, கோட்டை வரையிலும் விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேநேரம் கொழும்பு, கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி, இன்றும் எதிர்வரும் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளிலும் இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

# காலநிலை மாற்றம் தொடர்பான அறிவிப்பு!

காலநிலை மாற்றம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இன்று பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில், மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் மற்றும் தென் மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டம் மற்றும் கடலோரப் பகுதிகளில் காலை வேளையில் மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)



# வடக்கு மக்களின் காணிகளை அபகரிக்க அரசாங்கத்தின் சதி



கோவணத்துடன் சென்ற மக்களிடம் ஆவணம் கேட்கின்றீர்களா எனவும், கடந்தகால கொடுங்கோல் அரசுகளைப் பின்தொடர்கின்றீர்களா எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சபையில் சரமாரியாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சுமார் 5,941 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி உடனடியாக மீளப்பெறுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், "வடக்கில் கரையோரத்தில் மக்களுடைய காணிகரை அபகரிக்கும் செயல் இடம்பெறுகின்றதா? கடந்த 2025.03.28ஆம் திகதி வெளிடப்பட்ட 2430ஆம் இலக்க வர்த்தமானி மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,669 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,703ஏக்கரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 515ஏக்கரும், மான்னார் மாவட்டத்தில் 54 ஏக்கருமாக மொத்தம் 5,941 ஏக்கர் காணிகள், காணி நிர்ணயக்கட்டளைச்சட்டம் 5(1)ஆம் பிரிவில் அரசகாணிகளாக அபகரிக்கதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

குறிப்பாக குறுகிய காலத்தில் உரிய பதிவுகள் செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்த மக்களிடமிருந்து அவர்களின் காணிகளைப் பறிக்கப்போகின்றீர்களா?

இது வடக்கு மக்களுக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரிய துரோகமாக தெரியவில்லையா? அந்த மக்கள் 2009இல் இடம்பெயரும் போது. அதனையும் கொண்டு செல்லவில்லை. அப்போது இனவாதத்தின் கொடூரம் நடந்தது.

கோவணத்தோடு சென்ற மக்களிடம் ஆவணங்கள் கேட்கின்றீர்களா? ஏற்கனவே கொடுமைசெய்த இனவாத அரசுகளை நீங்களும் பின்தொடருகின்றீர்களா?

வடக்கு, கிழக்கு மக்களுக்கு துரோகம் செய்யவேண்டாம். எமது மக்களின் காணிகளை அபகரிக்கும்நோக்கில் வெளியிடப்பட்டுள்ள உடனடியாக மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார். (ஐ)

## உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அறிவிப்பு!

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும், தேர்தல் பிரச்சார வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டின் 03ஆம் எண் தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி வேட்பாளர்கள், தேர்தல் பிரச்சார வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்த தனித்தனி அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான ஆணையத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த செயல்முறை இருப்பதாக தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

அதன்படி வேட்பாளர்கள், போட்டியிட்ட மாவட்டங்களில் உள்ள தெரிவத்தாட்சி அதிகாரியிடம் இந்த வருமானம் மற்றும் செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களுக்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டியதுடன், தேர்தல் செயல்முறையின் நேர்மையை நிலைநிறுத்தவும், இணங்காத வேட்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தெளிவான சட்ட விதிகள் மற்றும் வழிமுறைகள் தேவை என்பதை கஜநாயக்க வலியுறுத்தினார்.

## கொட்டாஞ்சேனை மாணவி மரணம்! சபையில் கடுமையன வாக்குவாதம்



கொட்டாஞ்சேனையில் 15 வயதான பாடசாலை மாணவிதனது உயிரை மாய்த்துக்கொண்டமைக்கு காரணம் நாட்டில் சரியான நடைமுறை பின்பற்றப்படாமையே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடுமையாக சாடியுள்ளார்.

இது தொடர்பில் அரச தரப்பு எவ்வாறான நீதியை வழங்கப்போகிறது எனவும் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன் போது குறுக்கிட்ட சபாநாயகர் மாணவி தொடர்பான விடயத்தை பேசவிடாது எதிர்க்கட்சித் தலைவரை அமருமாறு கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, ஆளும் தரப்பின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், குறித்த மாணவியின் உயிரிழப்பை வைத்து யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என ஆவேசமாக பேசியுள்ளார்.

மேலும் மாணவியின் மரணத்தை விற்று அரசியல் நடத்த வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவியின் விடயத்தை பெரிய விடயமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை



உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்மைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் தேசியப் பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த அதன் தலைவர் சித்தார்த்தன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதன் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோருடன் மேற்படி விடயம் தொடர்பில் உரையாடியுள்ளோம்.

அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

அத்துடன், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சிங்கள பௌத்த இனவாத தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றுவதனைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தீர்மானித்துள்ளோம்" எனத் தெரிவித்தார் (ஐ)

## புதிய பாப்பரசர் பிரான்சிஸ் பிரிவோஸ்ட்'க்கு ஜனாதிபதி வாழ்த்து!

கத்தோலிக்க திருச்சபையின் 267ஆவது புதிய பாப்பரசராக ஐக்கிய அமெரிக்காவை சேர்ந்த கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பாப்பரசர் கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட்'க்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது உத்தியோகபூர்வ ஓ தளத்தில் வாழ்த்து செய்தியை பகிர்ந்துள்ளார்.

குறித்த வாழ்த்து செய்தியில்,

"உங்கள் பங்கு பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், அதன் ஊடாக உலக மக்களை வழிநடத்த உங்களுக்கு வலிமை கிடைக்க பிரார்த்திக்கின்றேன். உங்கள் தலைமை உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளிக்கட்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலை பொன்விழா நிகழ்வுகள் பிரான்ஸில் ஏற்பாடு!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வுகள் பிரான்ஸில் ஜூன் 8ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

பொன்ழா நிகழ்வுகள் பிரான்ஸ் தலைநகர், பரிஸின் புற நகர் பகுதியான ஏillenеuve Saint-Georges எனும் இடத்தில் உள்ள நுளியஉநளூறைநெ மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தினதும், வடக்கு - கிழக்கு பிரதேச வளர்ச்சிக்கும் பல முயற்சிகளை செய்து வரும் டுஐகுவு ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸில் வாழும் யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் யாழ். பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய காலை, கலாச்சார நிகழ்வுகளுடன் விருந்துபசார நிகழ்வும் இடம்பெறவுள்ளது.



# காஷ்மீரில் பயங்கரவாதிகள் 7 பேர் சுட்டுக்கொலை:

## பாதுகாப்பு படையினர் அதிரடி




ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள சம்பாவில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் 7 பேரை எல்லைப் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பதற்றமான சூழல் நிலவுகிறது. ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்தியா நடத்திய தாக்குதல் காரணமாக, பாகிஸ்தான் பதற்றத்தில் இருக்கிறது. பாகிஸ்தான் விடிய விடிய நடத்திய தொடர் தாக்குதல்களை இந்திய ராணுவம் முறியடித்து தக்க பதிலடி கொடுத்தது.

பாகிஸ்தானின் 50 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தியது. இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள சம்பாவில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் 7 பேரை எல்லைப் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர். எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. பயங்கரவாதிகள் யாரும் பதுங்கி இருக்கிறார்களா என்று தேடுதல் வேட்டை நடந்து வருகிறது. (ஐ)

## டில்லி இந்தியா கேட் பகுதிகளில் மக்களுக்கு தடை சண்டிகரில் எச்சரிக்கை ஒலி



இந்தியா கேட், ஜமா மசூதி, செங்கோட்டை உள்ளிட்ட இடங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜம்மு, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் எல்லையில், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் விமானப்படை தளங்களை குறிவைத்து, பாகிஸ்தான் ராணுவம் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நேற்றிரவு நடத்தியது. இவற்றை நம் படைகள், வான்வழி தாக்குதல் பாதுகாப்பு கவசத்தைப் பயன்படுத்தி, நடுவானிலேயே அழித்தன.

இந்நிலையில், எல்லையோர மாநிலங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. எல்லையில் பாதுகாப்பு படையினர் உஷார் நிலையில் உள்ளனர். டில்லி இந்தியா கேட் பகுதியில் மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக, வரலாற்று நினைவுச்சின்னங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியா கேட், ஜ/ம்மா மசூதி, செங்கோட்டை உள்ளிட்ட இடங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. அரசு ஊழியர்களுக்கு விடுமுறை ரத்து செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப உத்தரவிடப்பட்டுள்ளது. டில்லி விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சண்டிகரில் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது. சண்டிகரில் உள்ள விமானப்படை தளத்தில் இருந்து எச்சரிக்கை ஒலி விடுக்கபட்டுள்ளது. அனைவரும் வீட்டிற்குள்ளேயே இருக்கவும், பால்கனிகளில் இருந்து விலகி இருக்கவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. வான்வழி தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 3 மணி நேரத்திற்கு முன்பே விமான நிலையம் வாருங்கள் பயணிகளுக்கு உத்தரவு



பாதுகாப்பு காரணங்களுக்காக விமானப் பயணிகள் 3 மணி நேரத்திற்கு முன்பே விமான நிலையத்திற்கு வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் பதிலடி கொடுத்தது. இதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையே பரஸ்பர தாக்குதல் நடைபெற்று வருகிறது. இதனால், பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இந்த தாக்குதல் சம்பவங்களால் இந்திய எல்லை மாநிலங்களில், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும், விமான நிலையங்கள், ரயில் நிலையங்களில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக எல்லையோரங்களில் உள்ள ஸ்ரீநகர், சண்டிகர், அமிர்தரஸ், ஹல்வாரா, பாட்டியாலா, சிம்லா, கங்ரா, பட்டின்டா, ஜெய்சால்மர், ஜோத்பூர் உள்ளிட்ட 24 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில், விமானப் பயணிகள், விமான நிலையங்களுக்கு 3 மணிநேரத்திற்கு முன்பே வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்து அதிகாரிகளின் உத்தரவுப்படி, விமான நிலையங்களில் பயணிகள் தீவிர சோதனைகளுக்குப் பிறகே அனுமதிக்கப்பட இருப்பதால், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்பு சோதனைகள் அதிகரித்துள்ளதால், விமான நிலையங்களில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஜம்மு உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் விமான டிக்கெட்டுகளை கட்டணமின்றி ரத்து செய்யலாம் என்று ஏர் இந்தியா உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்கள் அறிவித்துள்ளன. (ஐ)

## மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்: பஞ்சாப் அரசு உத்தரவு



இந்தியா பாகிஸ்தான் இடையே தொடர் தாக்குதல் நடந்து வரும் நிலையில், மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என, பஞ்சாப் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு வேலை செய்பவர்களின் -லீவ்' ரத்து கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை

இதுகுறித்து பஞ்சாப் அரசு கூறியுள்ளதாவது: மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். வீட்டின் ஜன்னலை விட்டு விலகி இருக்க வேண்டும். விளக்குகளை எரிய வைக்க வேண்டாம். சைரன் அடித்தவுடன் செய்திகளை . மக்கள் அச்சப்பட தேவை இல்லை. ஆயுதப்படைகள் பணியில் உள்ளன. மக்கள் வீட்டிற்குள்ளேயே இருந்து ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளது.

பாகிஸ்தானுடன் 532 கி.மீ., எல்லையை பஞ்சாப் பகிர்ந்துகொண்டுள்ளது. ஆறு எல்லை மாவட்டங்களில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. அனைத்து போலீசாரின் விடுமுறைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தன்னைத்தானே தகவமைத்துக் கொள்ளும் சாதியம்!

ரமாதேவி ரத்தினசாமி

"தமிழ்நாடு போல இங்க சாதிப் பிரச்சினையெல்லாம் இல்லையா?

"நோ- நோ- யார்- என்ன சாதியெண்டே எங்கட சனங்களுக்குத் தெரியாது. சாதிப் பெயரைச் சொல்லி கதைச்சாலே ஜெயிலுக்கு போக வேண்டியதுதான்."

"வாவ், சூப்பர், அப்போ கல்யாணத்துக்குக்கூட சாதி பார்க்க மாட்டீங்க போல."

"அது கல்யாணத்துக்கு மட்டும் சாதி பார்ப்பினம்."

"ஓ தேர்தலில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது சாதி பார்க்கறதில்லதானே?"

"ம் இல்ல, சமீபக் காலமா, வேட்பாளர்கள் தாங்களே சாதி அடையாளம், சாதி அபிமானங்கள் அடிப்படையில் மக்களை ஈர்த்தெடுக்கும் போக்கும் காணப்படுதுதான், அதை ஒண்டும் செய்ய ஏலாதுதானே?"

"அது சரி, சாதி இருந்தாலும், தமிழகக் கிராமங்கள் போல, தீண்டாமை, ஒடுக்கப்படுதல் எல்லாம் கிடையாதுதானே?"

"அது கிராமப்புறத்தில இன்னும் இருக்குதான். ஆனா நகரத்தில, ஒரே ஓபிஸ்ல பணி செய்யற சனங்களுக்குள்ளகூட யார், என்ன சாதியெண்டு நாங்க அறிய ஏலாது."

இலங்கைப் பயணத்தில் சந்தித்த தோழியின் தோழியுடன் கதைத்த உரையாடல்தான் இது. "இல்ல ஆனா, இருக்கு" வடிவேலு கதையாகத்தான் இருக்கிறது இலங்கையில் சாதி குறித்த நடைமுறைகள்.

இலங்கைத் தமிழர்களுக்கிடையேயுள்ள சாதி அமைப்பு பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டதாக சமூக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். விஜயனின் வருகைக்குப் பிறகே இலங்கையின் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அதன்படி தேவா, நாகாஸ், யாக்காஸ், ரக்ஷா என்ற நான்கு இனக்குழுக்கள் ஆதி இலங்கைத்தீவில் இருந்ததாக அறியப்படுகிறது. ஆனால், காலப்போக்கில் வேதங்களின் வாயிலாக நான்கு வர்ண சாதி பெரும்பிரிவுகள் தோன்றி அவை நாலாயிரம் சாதிகளாகப் பிரிந்திருக்கலாம். வழக்கம்போல வேதங்களில் காணப்படும் சாதி நெறிகளைத் தவறாகப் புரிந்துகொண்ட காரணத்தால் சாதிகளில் பாகுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றியிருக்க வேண்டும்.

சோழப் பேரரசு இலங்கையில் மேற்கொண்ட அரசியல் சமூகப் பண்பாட்டு அம்சங்களின் வழியாக இந்துத்துவ சாதியப் பாகுபாடுகள் இலங்கை பூராவும் வியாபித்து செழித்து சடைத்து நின்றன. சமஸ்கிருத அறிமுகங்களும் அச்சமயத்தில்தான் நிகழ்ந்தது. போர்த்துகீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வசம் முதலில் அகப்பட்டது அரசியல் ரீதியிலும், புவியியல் ரீதியிலும் பலவீனமான யாழ்ப்பாண ராச்சியமே. அக்காலத்தில் யாழ்ப்பாண சாதிக்கட்டமைப்பு சைவ வேளாள மேட்டுக்குடியினரால் போசித்து வளர்க்கப்பட்டிருந்தது. வணிகத்தின் பெயரால் நாட்டுக்குள் நுழைந்தவர்கள்,

தமிழர்களது சாதிய வேறுபாட்டைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கல்வியையும் கலாச்சாரத்தையும் கொடுத்து தமக்கான ஊதியம் செய்யப் பயன்படுத்திக்கொண்டனர். ஆங்கிலேயர் காலத்தில் நிர்வாகப் பொறுப்பேற்ற முதலியார்களும் வெள்ளாளர்களும் தம்மை ஸ்திரமாக ஸ்தாபனப்படுத்திக்கொண்டனர்.

> **இந்தச் சாதிய இறுக்கமே ஈழத்தமிழர்களை, முஸ்லிம்கள் – மலையகத் தமிழர் – ஈழத்தமிழர் எனப் பிரித்தது. பின்னர் யாழ்– வன்னி – மட்டக்களப்பு என்றும் பிரித்தது. தற்பொழுது இங்குள்ள எந்தக் கட்சிகளுக்கும் சாதி குறித்து எந்த விழிப்புணர்வும் இல்லை. சமூக அறத்திற்காகப் போராட எந்த அமைப்புகளும் இல்லை. இனக்கலவரங்களைத் தூ ண்டிவிட்ட சக்திகள், தமிழர்கள், சிங்களவர்களைவிடத் தாழ்ந்த சாதி என்ற கருத்தையே விதைத்தன.**

கிட்டத்தட்ட 400 வருடங்கள் இலங்கையில் மாறி மாறி ஆட்சி செலுத்திய போர்த்துக்கீசியர்கள், ஒல்லாந்தர்கள், பிரிட்டானியர்கள், சாதிய அமைப்பைத் தகர்க்க விரும்பாமல் அதை அணைய விடாமல் பார்த்துக்கொண்டனர்.

தாமஸ் வன்றீ என்ற ஒல்லாந்த தளபதி 1697இல் எழுதிய அறிக்கையிலும், 1927 இல் பிரித்தானியர் எடுத்த கணிப்பீட்டிலும் தமிழர்களிடையே வழக்கத்திலிருந்த 33 வகையான சாதியைக் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் ஆகக் கீழ்நிலையில் இருந்த ஐந்து சாதியினர் பஞ்சமர் என அழைக்கப்பட்டனர். அவர்கள், 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை, "ஆண், பெண் இருபாலரும் மேலங்கி அணியக் கூடாது, முழங்காலுக்குக் கீழே உடை உடுத்தக் கூடாது, தோளில் துண்டு போடக் கூடாது, பெண்கள் தாவணி போடக் கூடாது, திருமணத்தில் தாலி கட்டக் கூடாது" என ஒடுக்கப்பட்டிருக்கின்றனர்.

சாதிய அமைப்பே இலங்கையின் சமூகக் கட்டமைப்பின் அதிகார படிநிலையின் அடித்தளமாக இன்று இருக்கிறது. பாடசாலைக் கல்வி, வேலைவாய்ப்பு, பாராளுமன்ற ஆசனம் போன்றவற்றுக்குச் சாதி சார்பான இட ஒதுக்கீடு கிடையாது. திருமணச் சட்டங்களிலும் சாதி இடம்பெறவில்லை. ஆனாலும், தமிழர், சிங்களவர் ஆகிய தேசிய இனங்கள் இரண்டுமே வலுவான சாதிப் படிநிலையைக் கொண்டுள்ளன. சிங்களவரின் சாதி அமைப்பில் மலைநாட்டு சிங்களவர், கீழ்நாட்டு சிங்களவர் என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய 'இலங்கை மக்கள்' என்னும் நூல் சிங்களர்களில் 43 வகையான சாதிகளின் பட்டியலைத் தருகிறது. தற்போது சிங்களர்களிடையே 13 வகையான சாதிகள் காணப்படுகின்றன. பரவர், முக்குவர், கம்மாளர், சாணார், கண்ணர், கொல்லர், தட்டார், தச்சர், அம்பட்டர், காடையர், குசவர், மறையர், நட்டுவர் பள்ளர், பறையர் வண்ணார், ஐயர், மறவர், செட்டியார், சிவியர் எனத் தமிழகத்திற்கு சற்றும் குறையாமல் இலங்கைத் தமிழர்களிடத்தில் சாதியப்பிரிவுகள் காணப்படுகின்றன.

மலைநாட்டு தமிழர்களும் இந்திய வம்சாவளித் தமிழர்களும் இலங்கைக்கு வணிகர்களாகக் குடியேறிய தமிழ் மக்கள் குழுவும் இந்திய சாதி அமைப்பு முறையை அடிபிசகாமல் பின்பற்றுகின்றனர்.

பௌத்தம் சாதியத்தை எதிர்க்கிறது. அதன் காரணமாக, சிங்களவர்களிடையே நிலவும் சாதியம், தமிழர்களிடையே நிலவும் சாதியம் போல் இறுக்கமாக இல்லை, சாதி அடிப்படையில் உயர்வு தாழ்வு இருந்தாலும், தீண்டாமை இல்லை. கண்டிய கிராமங்களை ஆய்வு செய்த நியூட்டன் குணசிங்க, இலங்கையில் பௌத்தமானது, அதன் முற்போக்கு தன்மையை இழந்து இந்துத்துவ சிந்தனை முறையான கர்மாவைத் தன்னகத்தே வரித்து முற்பிறப்பில் செய்த பலனே சாதியில் மேலோனாகவும், கீழோனாகவும் பிறப்பதற்குக் காரணமென்ற சித்தாந்தத்தைத் தூக்கிப் பிடிக்கிறது என்கிறார்.

இலங்கையில் சாதியத்திற்கு எதிரான போராட்டங்கள் 1960 களில் உச்சக்கட்டத்தை அடைந்து தீண்டாமையின் பல அம்சங்களை இல்லாமலாக்கியது. இந்தப் போராட்டங்கள் கம்யூனிஸ்டுகள், தேசியவாதிகள், காந்தியவாதிகள், சீர்திருத்தவாதிகள் எல்லோரையும் இணைத்துக்கொள்வதில் வெற்றிகண்டது. தமிழ்நாட்டினைப் போல சாதி மறுப்பு மணங்களை ஊக்குவிக்க, சமூக அமைப்புகள் இல்லை. ஆனால், போராட்ட இயக்கங்கள் இந்த நிலையினை மாற்றியது. 36 இயக்கங்களில் ஒன்றுகூட சாதிய மேலாதிக்கத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. புலிகள் அமைப்பு அதிக அளவில் சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தியது. புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சாதியை அடையாளப்படுத்தி பேசினால் 10,000 ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் என்ற சட்டம் இருந்தது. சாதிப்பெயரைச் சொல்லவே முடியாது. தீண்டாமை என்பது கிடையவே கிடையாது. போராளிகளின் அழிவுடன் இந்தச் சாதி ஒழிப்பு நடவடிக்கைகளும் முடிவுக்குவந்தன. காரணம், விடுதலைப்புலிகள் சார்பில் சாதியை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், அவர்களின் பிரதான நோக்கம் தமிழீழத்தை நோக்கி இருந்ததால், அக்காலத்தில் சாதியென்பது இல்லாமல் செய்யப்பட்டது என்பதைவிட ஒடுக்கிவைக்கப்பட்டது என்பதே உண்மை.

இந்தச் சாதிய இறுக்கமே ஈழத்தமிழர்களை, முஸ்லிம்கள் - மலையகத் தமிழர் - ஈழத்தமிழர் எனப் பிரித்தது. பின்னர் யாழ்- வன்னி - மட்டக்களப்பு என்றும் பிரித்தது. தற்பொழுது இங்குள்ள எந்தக் கட்சிகளுக்கும் சாதி குறித்து எந்த விழிப்புணர்வும் இல்லை. சமூக அறத்திற்காகப் போராட எந்த அமைப்புகளும் இல்லை. இனக்கலவரங்களைத் தூண்டிவிட்ட சக்திகள், தமிழர்கள், சிங்களவர்களைவிடத் தாழ்ந்த சாதி என்ற கருத்தையே விதைத்தன.

இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த பிராமணர்கள் தற்போது தங்களைப் பிராமணர்கள் என்று கூறுவதில்லை. அவர்கள் சிங்களவரின் சாதி வகுப்பில் இணைந்துவிட்டனர். தமிழர்கள் மத்தியில் வெள்ளாளர்களும் சிங்களர்கள் மத்தியில் கொவிகமவினரும் முக்கிய சாதிகளாக விளங்கி இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றனர். மலையகத் தமிழர்களில் உயர் சாதியினராகக் கருதப்படுபவர்கள் லைன் அறைகளின் முதல் வரிசையைப்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடு பாகிஸ்தான் இந்தியாவுக்கு பென்டகன் முன்னாள் அதிகாரி ஆதரவு



பாகிஸ்தானை பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடு என்று அமெரிக்கா முத்திரை குத்த வேண்டும் என்று பென்டகன் முன்னாள் அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

பஹல்காம் சம்பவத்தை தொடர்ந்து, இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்துள்ளது. இந்திய நிலைகள் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதலில் பாகிஸ்தான் ஈடுபட்டது. அதனை வெற்றிகரமாக இந்திய ராணுவம் முறியடித்துள்ளது. தொடர்ந்து, இந்திய ராணுவத்தினர் பாகிஸ்தானை நிலைகுலையச் செய்யும் வகையில் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில், பாகிஸ்தானை பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடு என்று அமெரிக்கா முத்திரை குத்த வேண்டும் என்று பென்டகன் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது லஷ்கர் இ தொய்பா போன்ற அமைப்புகளை தனிப்பட்ட பயங்கரவாத அமைப்புகளாக அமெரிக்கா உறுதி செய்துள்ளது. ஆனால், பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடாக பாகிஸ்தானை அறிவிக்கவில்லை.

தற்போதைய சூழலில், பாகிஸ்தானை பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடாக அமெரிக்கா அறிவிக்க வேண்டும். மேலும், இந்தியாவுக்கு முழு ஆதரவை வழங்க வேண்டும்.

பாகிஸ்தான் ஒரு தோல்வியடைந்த நாடு. ஒவ்வொரு முறையும் அரசாங்கம் தோல்வியை சந்திக்கும் போது, மக்களை திசைதிருப்ப, சிறுபான்மையினர் மீது துப்பாக்கிகளை திருப்புகிறது. இதுதான் தோல்வியடைந்த அரசின் நாடகம். பயங்கரவாதிகளின் தாயகம் பாகிஸ்தான் விளங்கி வருகிறது. பயங்கரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க முடியாத சூழலில், மேற்கத்திய நாடுகளை பாகிஸ்தான் அதிகாரிகள் முட்டாள்களாக்க பார்க்கின்றனர். தற்போது இந்தியா இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## பலூசிஸ்தானில் குழப்பம்: தனி நாடு கேட்டு ராணுவத்துடன் மோதும் போராளிகள்




பாகிஸ்தானின் பெரிய மாநிலமான பலுசிஸ்தானில், தனி நாடு கேட்டு அங்கு போராளிகள் பாகிஸ்தானுக்கு எதிராக போராடி வருகின்றனர்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ள சூழலை பயன்படுத்தி, பலுசிஸ்தான் விடுதலை போராளிகள், பாக்., ராணுவத்துடன் போராட்டத்தை தீவிரப்படுத்தி உள்ளனர். நேற்று நடந்த பலுசிஸ்தான் பயங்கரவாத தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த ராணுவ அதிகாரி உட்பட 14 பேர் பலியானார்கள்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வரும் நிலையில் பலுசிஸ்தானில் ஏற்பட்டுள்ள இந்த பிரச்னை பாகிஸ்தானுக்கு பெரிய தலைவலியாக மாறியுள்ளது. (ஐ)

## இந்தியா – பாக்., விவகாரத்தில் தலையிடமாட்டோம்: அமெரிக்கா அறிவிப்பு



இந்தியா - பாகிஸ்தான் விவகாரத்தில் தலையிட மாட்டோம் அது எங்கள் வேலை இல்லை’ என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க துணை அதிபர் வான்ஸ் கூறியதாவது: போர் பதற்றத்தை தவிர்க்கும்படி தான் அமெரிக்காவால் சொல்ல முடியும். இந்தியா - பாகிஸ்தான் விவகாரத்தில் தலையிடப்போவது இல்லை. அது எங்கள் பணியும் கிடையாது. இவர்களுக்கு இடையேயான போர், பிராந்திய போராகவோ அல்லது அணு ஆயுத போராகவோ மாறக்கூடாது. அவ்வாறு நடந்தால், அது பேரழிவை ஏற்படுத்தும். இது அந்த நாடுகளின் தலைவர்கள் வசம் தான் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## மும்பை தாக்குதல் பயங்கரவாதி ஹபீஸ் சயீத் பாக்., நீதிமன்றத்தில் மனு

இந்தியாவால் தேடப்படும் லஷ்கர் - -இ- - தொய்பா மற்றும் தடை செய்யப்பட்ட ஜமாத்- - உத் - -தவாவின் தலைவரான ஹபீஸ்சயீத், பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி செய்தது தொடர்பான வழக்குகளில், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து பாகிஸ்தான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துஉள்ளார்.

மஹாராஷ்டிராவின் மும்பையில், கடந்த 2008-ல் பாக்., பயங்கரவாதிகள் கடல் மார்க்கமாக வந்து தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலுக்கு, லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஹபீஸ் சயீத் மூளையாக செயல்பட்டார்.

ஐ.நா., சபையால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட சயீத், பயங்கரவாதத்திற்கு நிதியுதவி மற்றும் நிதி திரட்டியது போன்ற வழக்குகளில், 2019ல் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டார்.



ஆனால், சயீத் சிறையில் இல்லை பாக்., ஆதரவுடன் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதாக, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்து வருகின்றன.

தற்போது, பஹல்காம் தாக்குலுக்கு இந்தியா பதிலடி கொடுத்த நிலையில், சயீத் மற்றும் ஜமாத்- - உத் - -தவாவின் சில தலைவர்கள், பயங்கரவாத நிதி வழக்குகளில் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யக் கோரி லாகூர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

நீதிபதிகள் ஷாபாஸ் ரிஸ்வி மற்றும் தாரிக் மஹ்மூத் பஜ்வா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)



## எதிரிகளால் பேரிழப்பு சர்வதேச நாடுகளிடம் நிதியுதவி கோரிய பாகிஸ்தான்

எதிரிகளால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, சர்வதேச நேச நாடுகளிடம் பாகிஸ்தான் அரசு கூடுதல் நிதியுதவிகளைக் கோரியுள்ளது. காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு அமைப்புகள் முன்னெடுத்த தீவிரவாதத் தாக்குதலை அடுத்து, இந்தியா சிந்தூர் நடவடிக்கை என பதிலடி அளித்துள்ளது.

இதற்கு பாகிஸ்தான் தரப்பில் இருந்தும் பதில் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பாகிஸ்தானின் பொருளாதார விவகாரப் பிரிவு தமது சமூக ஊடகப் பக்கத்தில் உலக நாடுகளிடம் கடன் கேட்டு பதிவிட்டுள்ளது.

அதில், எதிரிகளின் தாக்குதல் மற்றும் பங்குச்சந்தையில் ஏற்பட்ட இழப்புகளால் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இந்த இழப்புகளை எதிர்கொள்ள சர்வதேச நேச நாடுகள் கடனுதவி அளிக்க முன்வர வேண்டும் என்றும் பாகிஸ்தான் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் சமூக ஊடகப் பயனர்கள் பலர் இதற்கு கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். சொந்த மக்களுக்கு செலவிடுவதற்கு பதிலாக பாகிஸ்தான் ராணுவம் போருக்கும் தீவிரவாதத்திற்கும் பணத்தை செலவிடுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புதன் கிழமை இரவு முதல் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் சிந்துார் நடவடிக்கையால், பாகிஸ்தானில் உள்கட்டமைப்புகளுக்கு பெரும் சேதம் அல்லது அப்பாவி பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக இதுவரை உறுதியான தகவல் ஏதும் வெளியாகவில்லை என்றே கூறப்படுகிறது. (ஐ)

## இலங்கையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்கள்19 முதல்54 வயதுக்குட்பட்ட ஆண்களாவர். கைது செய்யப்பட்டவர்கள் வெலிசறை குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறையின் தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பங்களாதேஷ் பிரஜைகளை விரைவில் அவர்களது நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ஹெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சைக்காக பொலனறுவை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இரண்டு வான்வழி துப்பாக்கி வீரர்கள் மற்றும் நான்கு இராணுவ விசேட படை வீரர்கள் உட்பட 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விமானப்படைத் தளபதி தலைமையிலான 9 பேர் கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## நல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்நபன அபிஷேகம் முத்தமிழ்க்குருமணி நா.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

சித்தாந்த பண்டிதர் கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் பூஜை வழிபாடுகளை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வரின் அஸ்தி பிரதிஷ்டை நிகழ்வு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை ஹெப்பற்றிக்கொல்லவே பகுதியில் நீரில் மூழ்கி
உயிரிழந்துள்ளார்.

ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த பாலேந்திரன் முகுந தன் (வயது 29) எனும் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப்பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் , சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

## அவசரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அவரது கொழும்பு விஜேராம இல்லத்தில் இந்தக்
கூட்டம் நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத்திற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இவ்வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதம் முதலாம் திகதியில் இருந்து மே மாதம் 8 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாடளாவிய ரீதியில் 43 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 43 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 29 பேர் உயிரிழந்துள்ளதுடன் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 94 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்வாறு எமக்கு வாக்களித்து எம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட – ஊக்கமளித்த தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவருக்கும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

மிகக் கேவலமாக தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்துப் போட்டியிட்டு இல்லாதவற்றைச் சொல்லி தங்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடியவர்கள் இப்போது நாங்கள் தேசிய மக்கள் கட்சியோடு டீல் பேசுகின்றோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டுப் பேசுகின்றார்கள்.

தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை மறுதலிக்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்தப் பரப்புரைகள் வேலை செய்யாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர் நளிந்த ஜயதிஸ்ஸ கூட தம்மைத் தமிழ்க் கட்சிகள் அணுகவில்லை என்பதைக் கூறியிருக்கின்றார்.

அடுத்த கட்ட செயற்பாடுகளை ஆராய்வதற்காக நாளை சனிக்கிழமை அரசியல் குழு கூடுகின்றது. எந்தெந்தச் சபைகளில் எவ்வாறு செயற்படுவது?, யார் யாரை முன்னிலைப்படுத்தி தவிசாளர், மேயரைத் தீர்மானிப்பது? பற்றிக் கலந்துரையாடவுள்ளோம்

ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பதில் பொதுச்செயலாளருடன் பேசியுள்ளார்கள். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்." - என்றார்.

## யாழில் பாலகன் திடீர் மரணம்!

யாழ்ப்பாணம், மே 09

திடீர் சுகவீனம் காரணமாக மூன்று வயது பாலகன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி, துன்னாலை பகுதியைச் சேர்ந்த வி.சுயாந் என்ற பாலகனே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பாலகன் கடந்த மாதம் 28ஆம் திகதி வயிற்றோட்டம் காரணமாக சிகிச்சை பெற்ற நிலையில் இந்த மாதம் 4ஆம் திகதி வயிற்று வலி ஏற்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்புக்கான காரணம் தெரியாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழப்பு!

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார்.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய டபிள்யூ.ஏ.டி.என். மஹகுமார என்ற அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உடல்நலக் குறைவு காரணமாக வெலிசர மார்பு நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று (09) காலை அவர் உயிரிழந்தார்.

இவர் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

உதவி பொலிஸ் பரிசோதகராக பொலிஸ் சேவையில் இணைந்து, இலங்கையின் பல பகுதிகளில் பணியாற்றிய இவர், சுமார் 15 ஆண்டுகள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தில் பணியாற்றியுள்ளார்.

உயிரிழந்த அதிகாரியின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருட்களுடன் 405 பேர் கைது!

கொழும்பு, மே 09

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருட்களுடன் 405 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 99 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன், 221 பேர் ஐஸ் போதைப்பொருளுடன், 85 பேர் கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# தன்னைத்தானே தகவமைத்துக்.........

பிடித்துள்ளனர். அந்தப் பிரிவில் வெள்ளாளர்கள், கள்ளர்கள், அகமுடையர்கள், முதலியார்கள் உள்ளனர். தமிழ் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வெள்ளாளர்களே.

"கள்ளர் மறவர் கனத்ததோர்
அகம்படி மெள்ள மெள்ள
வெள்ளாளர் ஆயினரே" என்ற சொல்வழக்கு காணப்படுகிறது.

தமிழ்நாட்டின் பார்ப்பனர்கள் போல, இங்கு வெள்ளாளர்கள் ஆதிக்க சாதியாக மாறுவதைத் தடுப்பதற்காகவே ஆறுமுக நாவலர் போன்றோர் இந்த இணைப்பினை ஊக்கப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். யாழ்ப்பாணச் சனத்தொகையில் சுமார் 50 சதவீதம், தாழ்த்தப்பட்ட சாதியினங்களைச் சேர்ந்த மக்களாக இருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. ஆனால், அந்த மக்களின் பிரதிநிதியாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட இல்லை.

கிராமப்புறங்களில் தீண்டாமை வெவ்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை வன்முறையாளர்களாகவும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் ஒரு பிம்பம் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் அரச பாடசாலைகளில்கூட ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சாதிய அடக்குமுறைக்கு அதிகம் ஆளாகின்றனர் என்கிறார் அரசுப் பள்ளியில் போதிக்கும் தோழி ஒருவர். வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் அரசப் பாடசாலையில் பயிலும் மாணவர் ஒருவர் கூறுகையில், "எங்களால் பள்ளிக்கூடத்துக்கு சந்தோசமா போய் வர ஏலாது, எங்களைச் சாதிப்பெயர் சொல்லி அண்ணாமார் கூப்பிடுவினம், நாங்க முறைச்சுப் பார்த்தாகூட அடிக்க வருவினம், ரீச்சர், சேர் மார்கூட என்ன நடந்தாலும் எங்களைத்தான் பிழை சொல்லுவினம், எங்களுக்குப் படிக்கவே விருப்பம் இருக்காது. இப்பிடி செய்தா யாருக்குதான் படிக்க மனம் வரும்? எங்கட இடத்தில் ஓ.எல். வரைக்கும் படிக்குறதே பெரிசு" என்கிறார்.

"பிள்ளைகள் எல்லோரையும் நாங்க சமமாகத்தான் பார்க்க வேணும். ஆனா, எல்லா வாத்திமாரும் அப்பிடி நடத்தினது இல்ல, உயர்சமூகப் பெண் பிள்ளைகளிடம் இவங்கள் கதைச்சா அதை யாரும் கண்டா பெரும் பிரச்சினை. சாதியச் சொல்லி அடிச்சுப் போடுவாங்கள். படிப்பிக்கிற ரீச்சர் மாரே இப்பிடிச் சாதியச் சொல்லி சொல்லி அவங்களை அவமானப்படுத்தினா அவங்களும் என்ன செய்வாங்கள்?" என்கிறார் ஆசிரியர் ஒருவர் கவலையோடு. பல்கலைக்கழகத்தில் யார் எவர் எனத் தெரியாமல் காதலில் சிக்குபவர்கள்கூட இரண்டாம் ஆண்டில் சாதியறிந்து தம் காதலை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். காதலுக்குக் கண் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால், காதலுக்குச் சாதி இருக்கிறது என்பதே சமூக யதார்த்தம். பேராசிரியர் கா.சிவத்தம்பி யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக்கப்படாதது, யாழ்ப்பாண நகர மேயராக இருந்த செல்லன் கந்தையனை கைநீட்டி அடிக்கலாம் என்று மாநகரசபை உறுப்பினர்களைவிட்டு அடிக்க வைத்தது அனைத்தும் சாதியத்தின் பூச்சுகள்தாம்.

சிங்களவரிடம் சம உரிமை கேட்டு போர்க்கொடி தூக்குபவர்கள் தங்கள் வீட்டு கோடிக்குள் தாங்கள் செய்கிற ஒடுக்குமுறை தெரிவதில்லை. தமிழ்தேசியம் பேசும் எவரும்கூடப் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக ஏதும் பேசுவதில்லை, வாக்குவங்கி சரிந்துவிடும் என்ற காரணத்தால். சாதிகள் ஒன்றும் இல்லை என்று முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பவர்கள் ஒடுக்கப்பட்ட சாதியினர் அல்ல, ஒடுக்கும் சாதியினராகத்தான் இருக்கிறார்கள். இலங்கை அரசு எவ்வாறு இனங்களுக்கு இடையே எந்தவிதப் பிரச்சினையும் இல்லை, நாம் எல்லோரும் இலங்கையர் என்ற போர்வையில் சிங்கள பேரினவாதத்தைக் கட்டமைக்கின்றதோ அதே போர்வையில்தான் சாதியம் என்று ஒன்றில்லை, இது மக்களைப் பிளவுபடுத்தும் சதி வேலை என்று புலம்புகிறார்கள் சக்திமான்களாய் இருக்கும் சாதிமான்கள்.

"1853 இல் புகையிரத சேவை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டபோது சாதியத்தை உடைக்க போக்குவரத்து நவீனமயமாக்கல் உந்துசக்தியாகுமென்று மார்க்ஸ் எழுதினார். ஆனால், உலகத்திலேயே இரண்டாவது மிகப்பெரிய புகையிரத சேவையைக் கொண்டுள்ள இந்தியாவில் சாதி அழியவில்லை, மாறாகச் சாதியானது நவீன வடிவங்களுக்கு ஏற்றவாறு தன்னை தகவமைத்து வருகிறது" என்பார் ஆனந்த் டெல்டும்டே என்ற அறிஞர். இது இந்தியாவுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் பொருந்துவதாக அமைகிறது. கொடுமையான போர்ச்சூழல்கள், மாறிவரும் உலகமயமாக்கல், நவீன மயமாதல், புலம்பெயர் வாழ்வு, பொருளாதாரச் சிக்கல்கள் என அனைத்தையும் கடந்து சாதியம் தன்னைத் தகவமைத்து இலங்கைச் சமூகத்தில் நிலை பெற்றிருக்கிறது என்பதே நிதர்சனம்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2025 வெளியிடப்பெற்றது.